**IN THE COURT OF JUDICIAL MAGISTREATE, (FTC) ERANIEL**
**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure, 1973 and Rule 42 and Judicial Form No. 53 of Criminal Rules of practice 2019 )
**STC.No. 13/2023 D.W. 1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | **திருமதி. ஆண்டனி மேரி** | **Caste** | : | |
| **Father's Name** | : | **க/பெ. ஆண்டனி** | **Calling** | : | |
| **Village** | : | | **Religion** | : | |
| **Taluk** | : | | **Age** | : | |

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day** 06.09.2024

**குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பு முதல் விசாரணை**

1. நான் 2008ம் ஆண்டு முதல் சென்னை சத்யபாமா நிகர்நிலை பல்கலைக்கழகத்தில் Project Assistant ஆக பணிபுரிந்தேன். 2011ல் எனக்கு திருமணம் ஆனது. திருமணம் முடிந்த பின்பு நான் சென்னையில் தான் இருந்தேன். என்னுடைய **ஆதார் அட்டையின் நகல் Ex.D1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

2. **என்னுடைய திருமண சான்று நகல் Ex.D2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இந்த வழக்கின் புகார்தாரருக்கும் எனக்கும் எந்தவித நேரடி கொடுக்கல் வாங்கலும் கிடையாது. கடந்த 2017ம் வருடம் என்னுடைய தாயார் லிட்டில் பிளவர் அவர்கள் புகார்தாரரின் மருமகன் ேஹார்மெஸ் மூலமாக அவரின் நண்பர் ரூஸ்வெல்ட் பெர்னான்டோவிடம் இருந்து 2லட்சத்து 50ஆயிரம் கடனாக வாங்கி இருந்தார்.

3. அந்த கடன்தொகைக்காக ஆகஸ்ட் மாதம் 2019 முதல் மே மாதம் 2020 வரை என்னுடை இந்தியன் வங்கி கணக்கு மூலம் 2லட்சத்து 79ஆயிரம் ரூபாய் நான் பணபரிவர்த்தனை மேற்படி ரூஸ்வெல்ட் பெர்னால்டோவிற்குச் செய்தேன். மே 2020 முதல் மார்ச் 2021 வரை யூனியன் பேங்க் ஆப் இந்தியா வங்கிக் கிளையிலிருந்து 70ஆயிரம் ரூபாயை மேற்படி ரூஸ்வெல்ட் பெர்னால்டோவிற்கு அனுப்பினேன். அதற்கான **வங்கி பரிவர்த்தனை ஆவணம் Ex.D3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

4. 2017 ஜுன் மாதம் முதல் ஏப்ரல் மாதம் 2019 வரை இந்தியன் வங்கி சத்யபாமா கிளை மூலம் செல்லான் மூலம் 6லட்சத்து 33ஆயிரத்து

692ரூபாயை புகார்தாரர் வங்கிக் கணக்குக்கு நான் Transfer செய்தேன் அதற்கான **வங்கி பரிவர்த்தனை ஆவணம் Ex.D4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

5. பின்னர் 2018 மே மாதம் முதல் செப்டம்பர் 2022வரை புகார்தாரரின் வங்கி கணக்கில் 5லட்சத்து 64ஆயிரத்து 692ரூபாய் இந்தியன் வங்கி மூலமாக செலுத்தினேன். அதற்கான **வங்கி பரிவர்த்தனை ஆவணம் Ex.D5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

6. பின்னர் 2020 ஜுன் மாதம் முதல் 2022 ஜுலை மாதம் வரை யூனியன் பேங்க் கணக்கில் இருந்து புகார்தாரரின் வங்கி கணக்கில் 3லட்சத்து 96ஆயிரத்து 328ரூபாய் செலுத்தினேன். அதற்கான **வங்கி பரிவர்த்தனை ஆவணம் Ex.D6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

7. என் அம்மா வாங்கிய 2லட்சத்து 50ஆயிரம் ரூபாய்க்கு மொத்தம் 19லட்சத்து 43 ஆயிரத்து 30ரூபாய் பணபரிவர்த்தனை செய்துள்ளேன். இவ்வளவு தொகை செலுத்திய பிறகும் புகார்தாரர் என்னிடமும் என்னுடைய அம்மாவிடமும் அதிகப்படியாக வட்டி கேட்டு தொடர்ந்து பிரச்சனை செய்தார்.

8. வட்டி பிரச்சனைக்கு முன்பு வரை குடும்ப நண்பர்களாக தான் இ்ருந்தோம். அவ்வாறு வந்து செல்கையில் என்னுடைய காசோலைகளை புகார்தாரர் எடுத்துச் சென்றுவிட்டார். மேற்படி காசோலையில் 55லட்ச ரூபாய் பூர்த்தி செய்து போலியாக கையெழுத்து செய்து தாக்கல் செய்துள்ளார்கள். அந்த காசோலையில் உள்ள கையொப்பம் என்னுடையது அல்ல. அதை பரிசோதிப்பதற்கும் நான் தயாராக உள்ளேன்.

9. மேற்படி புகார்தாரர் கூறியுள்ள புகாரில் எந்த தினத்தன்று புகார்தாரர் பணம் கொடுத்ததாக சொல்லியுள்ளாரோ அன்றைய தினத்தில் நான் பணிபுரியும் இடத்தில் பணியில் (Exam Dutyல்) இருந்தேன். அதற்கான ஆவணத்தை நான் கொண்டு வந்துள்ளேன்.

**(மேற்படி ஆவணங்களை குறியீடு செய்வதற்கு கற்றறிந்த புகார்தாரர் தரப்பு வழக்கறிஞர் கடுமையாக ஆட்சேபணை தெரிவிக்கிறார். என்ன ஆட்சேபனை என்று கேட்ட போது மேற்படி ஆவணம் யாரால் கொடுக்கப்பட்டதோ அவரை வைத்து தான் மேற்படி ஆவணம் குறியீடு செய்யப்பட வேண்டும் என்ற நிலையில், மேற்படி வழக்கில் குற்றம் சுமத்தப்பட்ட நபர் தாக்கல் செய்யப்பட்ட ஆவணமானது மேற்படி பல்கலைக்கழகத்தின் துணை வேந்தரால் கொடுக்கப்பட்ட நிலையில் அவரையோ அல்லது அவரால் பணிக்கப்பட்ட ஒரு நபர் மூலமாக மேற்படி ஆவணத்தை குறியீடு செய்யப்பட வேண்டும் என்று கூறியதால் வழக்கின் தன்மைக் கருதி மேற்படி கோரிக்கை ஏற்கப்பட்டது. மேற்படி முதல் விசாரணை குறியீடு செய்யும் வரை ஒத்திவைக்கப்படுகிறது.)**

**சாட்சி சொல்லி என்னால் எடுத்துச் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, மேற்படி சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.**

**நீதித்துறை நடுவர்,**
**விரைவு நீதிமன்றம்,**
**இரணியல்.**